முதன்மைச் செயலாளர்/ஆணையாளர் (வணிகவரி)
26 மே 2016
600 005

27 மே 2016

**சுருக்கம்**

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை ஏற்று, தேர்தல் தள்ளிவைக்கப்பட்டுள்ள தஞ்சாவூர் மற்றும் கரூர் மாவட்டங்கள் தவிர்த்து தமிழகத்தின் பிற மாவட்டங்களில், **"24"** தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு அளித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவு (சி1) த்துறை**

**அரசாணை (டி) எண். 177**

**நாள்: 24.05.2016**
**துர்முகி, வைகாசி 11,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2047**

**படிக்கப்பட்டது:–**

1. அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி (ம) பதிவுத்துறை, நாள் 21.7.2011.
2. அரசாணை (நிலை) எண்.2, வணிகவரி (ம) பதிவுத்துறை, நாள் 03.1.2012.
3. சென்னை உயர் நீதிமன்றத்தின் 07.04.2016–ஆம் நாளிட்ட ஆணை (வழக்கு எண்.13383/2016)
4. முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் கடித எண்.சட்டக்குழு–4/11038/2016, நாள் 18.05.2016 தேர்வுக்குழு எண்.10/2016–2017.
5. இந்திய தேர்தல் ஆணையத்தின் கடித எண்.437/6/INST/2016-CCS, நாள் 21.05.2016.
6. பொது தேர்தல் துறை அ.சா.கு.எண்.13246/தேர்தல்–VIII/2016, நாள் 23.05.2016.

-----

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் கேளிக்கை வரிச்சலுகை பெற திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சில கூடுதல் தகுதி வரையறைகளை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும், வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்ற திரைப்படங்களை பார்வையிட்டு வரிவிலக்கிற்கு பரிந்துரை செய்ய மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேர்வுக்குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

2. சென்னை உயர் நீதிமன்றம், மேலே 3–இல் படிக்கப்பட்ட ஆணையில், **"24"** திரைப்படத்தின் தயாரிப்பாளர் வழங்கிய வரி விலக்கு கோரும் விண்ணப்பத்தினை ஆய்வு செய்து, தேர்தல் ஆணையத்தின் ஒப்புதலை பெற 16.5.2016 அன்றோ அதற்கு முன்னரோ அனுப்ப வேண்டுமென்றும், தேர்தல் ஆணையம் அதன் ஒப்புதலை 19.5.2016 அன்றோ அதற்கு முன்னரோ

வழங்கவேண்டும் என்றும், அதன் அடிப்படையில் உரிய ஆணையினை 24.5.2016 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ வெளியிட வேண்டுமென உத்தரவிட்டுள்ளது.

3. மேற்கண்ட சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையில், முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையரால் நியமனம் செய்யப்பட்ட ஏழு தேர்வுக் குழு உறுப்பினர்கள் **"24"** திரைப்படத்தினை பார்வையிட்டு, பார்வையிட்ட ஓர் அலுவல் சார்ந்த உறுப்பினர் **"24"** என்று எண் வரி வடிவில் உள்ள இப்படத்திற்கு வரிவிலக்கு வழங்க பரிந்துரைக்க இயலவில்லை என்றும் அரசு நிலையில் கருதிப்பார்த்து முடிவெடுக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார். மற்ற ஆறு உறுப்பினர்கள் இத்திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்களிக்க பரிந்துரை செய்துள்ளனர்.

4. மேற்கண்ட சூழ்நிலையில், சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின் பார்வையிட்ட பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை ஏற்று, மேலே 5-இல் படிக்கப்பட்ட கடிதத்தில், இந்திய தேர்தல் ஆணையம் வழங்கியுள்ள அறிவுறுத்தலின் அடிப்படையில், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939-ன் பிரிவு 8, உட்பிரிவு 2-இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி, தேர்தல் தள்ளிவைக்கப்பட்டுள்ள தஞ்சாவூர் மற்றும் கரூர் மாவட்டங்கள் தவிர்த்து தமிழகத்தின் பிற மாவட்டங்களில், **"24"** தமிழ் திரைப்படத்திற்கு ஆணையிடப்படும் நாள் முதல் கேளிக்கை வரியிலிருந்து விலக்களித்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

5. தஞ்சாவூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் **"24"** தமிழ் திரைப்படத்தினை திரையிடுவதன் மூலம் வசூலிக்கப்படும் கேளிக்கை வரியினை அரசுக்கு செலுத்த வேண்டும் எனவும் ஆணை பிறப்பிக்கப்படுகிறது. இது தொடர்பாக சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்குமாறு முதன்மை செயலர்/வணிகவரி ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசீமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர் (முகூபொ).

<u>பெறுநர்</u>

முதன்மைச் செயலாளர்/ வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை-5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, சென்னை-9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை-8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்
நகல்:
சிறப்பு நிலை நேர்முக உதவியாளர், அமைச்சர் (வணிகவரி (ம) பதிவு) அலுவலகம், சென்னை-9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, சென்னை-9.
பொது (தேர்தல் VIII) துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

24/5/2016

பிரிவு அலுவலர்.